**ORIGINAL ARTICLE**

# பலதாரமணம் குறித்து முஸ்லிம் பெண் செயற்பாட்டாளர்களின் கருத்துநிலை - கிண்ணியா பிரதேச நேர்வுநிலை பற்றிய ஆய்வு

**[PALATĀRAMAṆAM KUṞITTU MUSLIM PEṆ CEYAṞPĀṬṬĀḶARKAḶIṈ KARUTTUNILAI - KIṆṆIYĀ PIRATĒCA NĒRVUNILAI PAṞṞIYA ĀYVU]**

# THE PERCEPTION OF WOMEN ACTIVISTS ON POLYGAMY: A CASE STUDY IN KINNIYA REGION

**முகம்மது முபாறக் சியானா*[1]/Muhammathu Mubarak Shiyana*[1]**
**எம். ஐ. எம். ஜெஸீல்/ M.I.M. Jazeel [2]**

[1] Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language South Eastern University of Sri Lanka. Email: shiyana@seu.ac.lk
[2] Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language South Eastern University of Sri Lanka. Email: jazeelmi@seu.ac.lk

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/122

**Abstract**

The marriage system polygamy has pervaded discourse among social activist and women's movements. This study aims at examine effect of polygamy on the perception of the women activists in the region of Kinniya. This study used the analysis of data obtained from purpose sampled women activist through interviews. The review of the literatures contributed to construct the conceptual framework of the study. The findings reveal that the women activists have different perception on polygamy as system of marriage. Majority of them most likely consider its permission pertaining to emerging necessary situation. However, few women recommend this marriage system as it benefit the women at large. In comparison the majority of the women activists conceive it as inappropriate as it resulted in disadvantage to women in practice. Furthermore, those who are agreement with Islamic permission to the polygamy confined it with life style, and cultural pattern of the early period. They hold the high opinion of negative impact on women in Kinniya. This policy makers can refer the findings of this study to make recommendations and law amendment.

**Keywords**: Polygamy, Muslim Women, Family life, Kinniya

**ஆய்வுச் சாரம்**

திருமணம் முறைமைகளில் ஒன்றான பலதாரமணத்தின் பொருத்தம் குறித்த வாதமானது சமூக ஆர்வலர்கள் மத்தியிலும் பெண் உரிமைசார் அமைப்பினரிடையேயும் வாதப் பிரதிவாதங்களைத் தோற்றிவித்துள்ளது. இந்நிலையில் கிண்ணியாவிலுள்ள முஸ்லிம் பெண் செயற்பாட்டாளர்களுக்கு மத்தியில் பலதாரமணம் குறித்த கருத்து நிலையினை இவ்வாய்வு மதிப்பிடுகிறது. குறிக்கோள் மாதிரி முறையில் பெண் செயற்பாட்டாளர்களிடம் நேர்காணல்கள் நடத்தப்பட்டு குறியீட்டு முறையில் தரவுப் பகுப்பாய்வைப் பயன்படுத்தும் இந்த ஆய்வு இலக்கிய மீளாய்வுகள் மூலம் கோட்பாட்டு அமைப்பத்திட்டத்தை நிறுவியுள்ளது. கிண்ணியா வாழ் பெண் செயற்பாட்டாளர்களிடையே பலதாரமணம் குறித்த கருத்து நிலையில் ஒருமுகத்தன்மை இல்லை. அநேகர் இதனை அவசிய சூழ்நிலைகளில் அனுமதிக்கலாம் எனும் கருத்தும் அதேவேளை சிலர் இதனைப் பெண்ணுக்கு நன்மையானது எனக் கருதி ஏனயோருக்கு பரிந்துரைக்கும் நிலையிலும் உள்ளனர். ஒப்பீட்டளவில் பெரும்பான்மையானவர் பலதாரமணம் பெண்ணுக்கு ஏற்படுத்தும் பிரதிகூலங்களைக் கோடிட்டுக்காட்டி அதன் பொறுத்தபாடின்மையை பிரஸ்தாபிக்கின்றனர். இஸ்லாமிய பலதாரமண செயற்பாடுக்கு உடன்படுபவர்களாக உள்ள பெரும்பாலானவர்கள் அது கடந்தகால நிகழ்வுகள், பெண்களின் மனநிலை, மக்களின் வாழ்வியல், கலாசார நம்பிக்கை, பொருளாதார பற்றாக்குறை, சூழல் ஆகியவை பாற்பட்டதாக அமைந்தது என வாதிக்கின்றனர். கிண்ணியா பிரதேச பிரத்தியோக சூழல்நிலைகள் பலதாரமணம் பெண்ணுக்குப் பாதங்களையே ஏற்படுத்தவல்லது என்பது அவர்களின் வலுவான அப்பிராயமாகும். முஸ்லிம் பெண்கள் தொடர்பான சட்ட திருத்தங்களுக்கும் பெண்கள் நலன்சார் கொள்கைகளை உருவாக்கத்துக்கும் பெண் தொடர்பான ஆராய்ச்சிக்கும் இந்த ஆய்வு ஒரு வாசிப்பாக கொள்ளமுடியும்.

**கருச் சொற்கள்:** பலதாரமணம், முஸ்லிம் பெண்கள், குடும்ப வாழ்வு, கிண்ணியா பிரதேசம்

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 25th December 2020, revised 18th January 2021, accepted 30th January 2021

## முன்னுரை

மனித வாழ்வில் இடம்பெறக்கூடிய மிக முக்கிய கலாசார அம்சங்களில் ஒன்றாக திருமணம் விளங்குகின்றது. இது இரண்டு நபர்களுக்கிடையிலான சட்டபூர்வமான உறவினைக் குறிப்பதோடு ஒப்பந்தங்கள், விதிகள், கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு சமூக நிறுவனமாகவும் கருதப்படுகிறது (Syeda, 2018)[1]. அந்த வகையில் திருமண வடிவங்களில் ஒன்றான பலதாரமணம் என்பது ஒருவர் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளைக் கொண்டிருக்கும் வழக்கத்தினைக் குறிக்கிறது (Philips & Jones, 2005)[2]. பலதாரமணமானது பெரும்பாலும் அந்தந்த சமூகங்களிடையேயுள்ள மக்களின் சூழல், வர்க்கம், சமூக, பொருளாதார, போர் நி்லைகளுடன் இணைக்கப்பட்ட ஒன்றாக இருந்துள்ளது. எனினும் பலதாரமணம் நிறுவப்படுவதற்கான முக்கிய வரலாற்று காரணியாக போர்களை ஜைதி (Zaidi, 2016)[3] கருதுகிறார். பலதாரமணம் நடைமுறையைக் கொண்ட கலாசாரங்களுக்குள்

பலதாரமண அணுகுமுறைகள் பாலினங்களுக்கு இடையில் வேறுபட்டே அமைகின்றன (White, 1988)[4]. மோர்மன் சமூகத்தில் இத்திருமண நடைமுறை இரகசியமாக இருந்ததுடன் பிற்பட்ட காலங்களில் இது சமூகத்துடன் தொடர்புடைய காரணியாகிய மாறியதால் பல சர்ச்சைகளும் ஏற்பட்டதாக அறியப்படுகிறது (Nate Olson, 2009)[5]. ஆபிரிக்காவில் ஜோஸ் பீடபூமியின் பழங்குடியினரிடையே பலதாரமணம் மிகவும் பிரபலமானது. திபெத், நேபாளம், பூட்டான், அண்டை நாடான இமயமலைப் பகுதிகளிலும் பல சந்ததிகளாக இத்திருமண முறை பொதுவானதாகக் கருதப்பட்டது. பண்டைய இஸ்ரேலிலும் இது ஏற்றுக்கொள்ளத்தக்கது என்பதற்கு ஏராளமான சான்றுகள் இருந்ததெனவும் அறியப்படுகிறது. இவ்வாறு பலதாரமணமானது பலராலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற திருமணமாக விளங்கினாலும் சில இடங்களில் அதற்குத் தடையும் விதிக்கப்பட்டிருக்கிறது (Nihaya, 2014)[6]. 1935இல் தாய்லாந்திலும் 1953இல் சீனாவிலும் 1955 இல் இந்தியாவில் இந்துக்களிடையேயும் 1963 இல் நேபாளத்திலும் பலதாரமணம் தடை செய்யப்பட்டது. பெரும்பாலான மேற்கத்தய நாடுகளில் பலதாரமணம் சட்டப்பூர்வமானது அல்ல என்றாலும் குறிப்பிட்ட இன மற்றும் மதங்களில் இன்று வரை நடைமுறையில் உள்ளதனைக் காணலாம். (Thobajane, 2014)[7]. பௌத்த சமுயத்திலும் பலதாரமண நடைமுறை இருந்துள்ளது. பலதாரமணத்தின் காரணமாக மறுபிறப்புகளிலும் கூட ஒருவருக்கொருவர் முடிவில்லா வெறுப்பைக் கொண்டிருந்த பெண்களைப் பற்றி தம்மபத அத்தாஹுத கதையில் குறிப்பிடப்படுகிறது (Thobajane, 2014)[7]. ஆரம்பகால கிறிஸ்தவர்களும் யூதர்களைப் பின்பற்றி பலதாரமணம் செய்யக்கூடியவர்களாக இருந்துள்ளார்கள் (Philips & Jones 2005)[2].

பலதாரமணம் பற்றிய வாதமானது சமீபத்தில் அறிஞர்கள், பாரம்பரியவாதிகள் மற்றும் பெண்ணியவாதிகள் ஆகியோரின் கவனத்தை ஈர்த்துள்ளது. அந்த வகையில் மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பெண்ணியவாதிகள் பலதாரமணத்தினை பெண்களுக்கு ஒடுக்குமுறையான மற்றும் பாரபட்சமான திருமண முறையாக கருதினாலும் பாரம்பரியவாதிகள் இம்முறையை சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களின் நலன்களுக்கும் சேவை செய்யும் ஒரு நிறுவனமாக கருதுகின்றனர் (Johnson, 2005)[8]. இஸ்லாமிய பலதாரமணத்தின் மீதான பெண்ணியத்தின் தாக்கம் ஒவ்வொரு முஸ்லிம் சமுதாயத்திலும் ஒவ்வொரு இடத்திலும் வேறுபட்டதாகவே அமைகின்றது. அந்த வகையில் ஜோர்தானில் 2001 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சிவில் நிலைச் சட்டத் திருத்தத்தின் பின்னர் கணவர் மீண்டும் திருமணம் செய்வதற்கு முன்பு மனைவியின் ஒப்புதலினை பெறல் அவசியம் எனக்கருதப்பட்டது (Hatem et al, 1995)[9].

இந்தோனேசியா மற்றும் மலேசியா போன்ற ஆசியாவில் உள்ள இஸ்லாமிய சமூகங்களும் பெண்ணிய இயக்கங்களும் பலதாரமண நடைமுறைகளைக் கட்டுப்படுத்த தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாகவும் அறியக்கூடியதாகவுள்ளது (GPP, 2008)[10]. பதாயத் என் யூ எனும் பெண்கள் அமைப்பின் கருத்துப்படி ஆண்களும் பெண்களும் சமமற்றவர்களாக இருந்தால் மாத்திரமே பலதாரமணம் சாத்தியமாகும் என்கின்றனர். மறுபுறம் மற்றைய இந்தோனேசிய பெண்ணியவாதிகள் மத நூல்களை ஆய்வு செய்து மறுவிளக்கம் அளிப்பதன் மூலம் இந்த நடைமுறைக்குச் சவால் விடுத்துள்ளனர் (Amez, 2010)[11]. ஆண்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமது வெறுப்பைக் காட்டுவதற்காக பலதாரமண திருமணம் செய்வதாகவும் பெண்களை அவர்களின் சொத்தாக கருதுவது மட்டுமன்றி அதனைப் பெருமைக்குரிய விடயமாகவும் பார்ப்பதாக நவீனத்துவவாதிகள் கருதுகின்றனர் (Moghissi, 2002)[12]. பலதாரமணம் என்பது சர்வதேச மனித உரிமை சட்டத்தை மீறுவதாக கனடாவின் நீதித் துறையாலும் வாதிடப்பட்டது (Ahamed, 2014)[13]. இவ்வாறான நிலைகள் ஒருபுறமிருந்தாலும் மறுபுறம் பலதாரமணத்தினை ஆதரிப்போரும் இருக்கத்தான் செய்கிறார்கள். மலேசியாவிலுள்ள 70%

முஸ்லிம் பெண்கள் பலதாரமணம் செய்யும் ஆண்களுடன் உடன்படுவதாகவும் 32% பெண்கள் இதனை அனுமதிப்பதாகவும் (Sister in Islam) பெண்கள் அமைப்பு நடத்திய ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது (Zainal, 2019)[14]. பெர்கோவிட்ஸ் (Berkowitz, 2007)[15] நடத்திய ஓர் ஆய்வில் மனித சமூகங்களில் சுமார் 83% பேர் பலதாரமணத்தை அனுமதிக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார். ரெஹ்மான் (Rohman, 2013)[16] நடத்திய ஆய்வொன்றில் மனைவிமார்களிடையே இணக்கமான உறவுகள் இருக்கும் பட்சத்தில் பலதார மணங்களுக்குள் நுழைய ஒரு சிறிய பெண்கள் விகிதம் ஒப்புக்கொள்வதாக குறிப்பிடுகின்றார் (Thobajane, 2014)[7].

மேலும் பலதாரமணத்தின் தாக்கங்கள் குறித்தும் பல ஆய்வுகள் வெளியாகியுள்ளன. அந்த வகையில் ஆரிப், பத்மா (Arif, & Fatma, 2018)[17] ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் சிரியாவில் பலதார திருமணங்களில் உள்ள பெண்கள் குறைவான வாழ்க்கை திருப்தி, குறைந்த திருமண திருப்தி மற்றும் மனநல பிரச்சினைகளை அனுபவித்ததாக ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தின. நூர்மிலாவினால் (Nurmila, 2009)[18] மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் பலதாரமணம் பற்றிய தாக்கங்களைப் புரிந்துகொள்ளும் பொருட்டுப் பலதாரமணிய பெண்கள், அவர்களின் கணவர்கள் மற்றும் சில குழந்தைகள் நேர்காணல் செய்யப்பட்டதுடன் பலதாரமணத்தை அனுமதிக்கும் அல்குர்ஆனின் (4:3) பல்வேறு விளக்கங்களை மானுடவியல் மற்றும் பெண்ணிய அணுகுமுறைகளைக் கொண்டு விவாதித்தார். இந்த ஆய்வானது நூர்மிலாவின் அணுகுமுறையிலிருந்து வேறுபடுகிறது. ஏனெனில் இங்கு பலதாரமணம் குறித்து பெண்களிள் கருத்து நிலைகளின் அடிப்படையிலேயே தரவுகள் பகுப்பாயப்பட்டிருக்கின்றன. எனினும் பலதார மணம் பற்றிய ஆய்வை எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கு நூர்மிலாவின் ஆய்வுப்பணி ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது. சேபர்டினால் (Shepard, 2013)[19] மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் ஒற்றைப் பெண்களுடன் பலதாரமணத்திலுள்ள பெண்களை ஒப்பிடும் போது பலதாரமணியாளர்களுக்கு மன-சுகாதார பிரச்சினைகள் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது. இன்னும் பலதாரமணமானது மன அழுத்தம், மனநோயுடன் தொடர்புடையது என்றும் மற்றுமொரு ஆய்வில் முடிவு காணப்பட்டது (Al-Krenawi, 2001)[20]. அலி ஒஸ்ர் (Özer et al, 2013)[21] போன்றோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பலதாரமண மற்றும் ஒற்றைத் திருமண மனைவிகளிடையே வெவ்வேறு சமூகவியல் மாறுபாடுகள், மனச்சோர்வுகள் இருப்பதாக முடிவுகள் தெரிவிக்கின்றன. ஆனால் இவ்வாய்வானது பலதாரமணியாளர்களின் நலன்கள் தொடர்பில் ஒப்பிட்டு வாதாடுவதல்ல. மாறாக பெண் செயற்பாட்டாளர்களின் கருத்து நிலையினை ஆராய முற்படுகின்றது.

ஏனைய நாடுகளில் உள்ள முஸ்லிம் திருமண சட்டங்கள் பற்றியும் நாம் அறிந்திருப்பது அவசியமாகும். அந்த வகையில் மலேசியாவில் பலதாரமணம் முடிக்க விரும்புகின்ற ஒருவர் அந்நாட்டு நீதிமன்றத்தின் அனுமதியோடு முதல் மனைவியின் சம்மதத்தினையும் பெற வேண்டும். எகிப்தில் மற்றுமொரு திருமணம் முடிக்க விரும்புபவரின் முதல் மனைவி தனது கணவனைதான் திருமணம் செய்து கொண்ட ஒரு வருடத்திற்குள் விவாகரத்து செய்ய உரித்துடையவராக கருதப்படுகிறாள். பாக்கிஸ்தானில் பலதாரமணம் செய்து கொள்ள விரும்பும் நபர் தனது முதல் மனைவியின் அனுமதியினைப் பெற்றிருப்பதுடன் பிரதேச இணக்க சபையின் அனுமதியையும் பெற்றிருக்க வேண்டும். அதே போன்று இலங்கை முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் பிரிவு 24 இன் படி முஸ்லிமான ஆண் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளைத் திருமணம் செய்ய முன் பிரதேச காதி நீதவானுக்கு அறிவிக்க வேண்டும் (சூளனி, 2009)[22]. அண்மைக்காலங்களில் இலங்கையிலுள்ள முஸ்லிம் பெண்கள் வீட்டு வன்முறை, கணவனினால் ஒழுங்காக பராமரிக்கப்படாமை, சுரண்டல் போன்றவற்றை எதிர்கொள்வதுடன் அவர்களது கணவர்கள் பல மனைவிகளைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெறும் போது பல சவால்களையும்

எதிர்நோக்குவதாக அறியமுடிகிறது. பெண்களுக்கு எதிரான பாகுபாட்டைத் தடைசெய்து உரிமைகளைப் பாதுகாக்கும் CEDAW, CRC, ICESCR மற்றும் ICCPR போன்ற மனித உரிமை ஒப்பந்தங்களில் இலங்கையும் ஒரு கட்சி என்றாலும் MMDA இன் கீழ் முஸ்லிம் பெண்களுக்குச் சமமான பாதுகாப்பு வழங்கப்படவில்லை (Sreen, 2016)[23]. பலதாரமணத்தை நாடுபவர்கள் அதன் கட்டுப்பாடுகளை மீறும் போது எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற விடயம் தொடர்பில் எத்தகைய சட்ட ஏற்பாடுகளும் இல்லை. (ஹஸனாஹ், 2015)[24]. அத்தோடு இலங்கையில் பலதாரமணம் தொடர்பான சட்டம் குர்ஆனிய அடிப்படையைத் திருத்தமாகக் கொண்டு அமையவில்லை (மர்சூப். 2008)[25].

எனவே மேற்குறித்த பல கருத்துக்களின் அடிப்படையில் நோக்கும் போது பலதாரமணத்துக்குச் சார்பாகவும் மறுபுறம் அதற்கு எதிராகவும் பல கருத்துக்கள் தோன்றியுள்ளதனை அவதானிக்கலாம். ஆய்வுப்பிரதேசமான கிண்ணியாவானது திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள ஓர் இஸ்லாமிய பாரம்பரியமிக்க பிரதேசமாக விளங்குகிறது. இது திருகோணமலையில் இருந்து சுமார் 20 KM தூரத்தில் அமைந்துள்ளது. இது கிழக்கே கொட்டியாரக் குடாவையும் தெற்கே மகாவலியையும் மேற்கே தம்பலகாமத்தையும் பிரதேச எல்லைகளாகக் கொண்டுள்ளதுடன் இப்பிரதேசமானது 146.9 சதுர கிலோ மீற்றர் பரப்பளவை கொண்டது. இங்கு பெரும்பான்மையானவர்களாக மூர்ஸ் என அழைக்கப்படும் முஸ்லிம்களும் இலங்கைத் தமிழர்கள், சிங்களவர்கள், கிறிஸ்தவர்கள் போன்ற இனத்தவர்களும் சிறிய அளவில் உள்ளனர். கிண்ணியாவில் மொத்தமாக 31 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. இதில் சுமார் 17 பிரிவுகள் நகர சபையினையும் 14 பிரிவுகள் பிரதேச சபையினையும் உள்ளடக்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டு கிண்ணியாவின் சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி மொத்தமாக 39,328 ஆண்களும் 38,426 பெண்களும் 21,844 குடும்பங்களும் 77,945 முஸ்லிம்களும் 2,828 இந்துக்களும் 4 கிறிஸ்தவர்களும் பௌத்தர் ஒருவரும் காணப்படுகின்றனர். (Census of Population, 2018)[26]. இங்கு விவசாயம் மற்றும் மீன்பிடிப்பு என்பன முக்கிய ஜீவனோபாயமாக விளங்குவதோடு இங்குள்ள ஆண்களும், பெண்களும் தனியார் நிறுவனங்களிலும், அரச நிறுவனங்களிலும் கடமை புரிவதாகவும் அறியமுடிகிறது. இன்னும் சில ஆண்களின் தொழில் வாழ்க்கையைப் பொறுத்தவரை சிறு வணிகம் ,வியாபாரம், விவசாயம், கூலி வேலை, வெளி நாட்டு வேலை என்றவாறு அமைகின்றன. இவ்வாறான பல பின்னணிகளில் கிண்ணியா பிரதேசத்திலுள்ள முஸ்லிம் பெண்களுக்கு மத்தியிலும் பலதாரமணம் தொடர்பில் பலதரப்பட்ட கருத்துக்கள் இருப்பதாகவும் அறியப்படுகிறது. இந்நிலையில் பலதாரமணம் தொடர்பில் கிண்ணியா பிரதேச பெண் செயற்பாட்டாளர்களின் கருத்து நிலையினை கண்டறிவதே இவ்வாய்வின் பிரச்சினையாக உள்ளது.

## ஆய்வு முறை

இவ்வாய்வானது குறிக்கோள் மாதிரி அடிப்படையில் அமைந்த பண்புரீதியான ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகள் எனும் வகையில் அவை கிண்ணியா பிரதேசத்தினை சேர்ந்த இருபது முஸ்லிம் பெண் செயற்பாட்டாளர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்டுள்ளதுடன் ஆய்வு தொடர்பான கோட்பாட்டு ரீதியான தகவல்களைப் பெற ஆய்வு நூல்களும், கிண்ணியா பிரதேச செயலக அறிக்கை, ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தள வெளியீடுகள், இதழியல்கள் போன்றனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நேர்காணலுக்கு முன்பு பங்கேற்பாளர்களிடம் ஆய்வு தொடர்பான தெளிவு வழங்கப்பட்டு அவர்களின் ஒப்புதல்களும் பெறப்பட்டன. நேர்காணலுக்காக வினாக்கள் முன்கூட்டியே தயாரிக்கப்பட்டு அவை தொடர்பில்

பெண்களிடம் வினவப்பட்டன. பலதாரமணம் குறித்த பெரும்பாலான ஆய்வுகள் ஆண்களின் முன்னோக்குகளில் வெளியாகியுள்ளதோடு பலதாரமணம் பற்றிய பாலின வேறுபாடுகள் கொண்ட ஆய்வுகள் ஒப்பீட்டளவில் குறைவாகவேயுள்ளன (Borgerhoff-Mulder, 1992)[27]. எனவே இவ்வாய்வு இடைவெளியினைக் கருத்திற் கொண்டு பலதாரமணம் தொடர்பில் கிண்ணியா பிரதேச பெண் செயற்பாட்டாளர்களின் கருத்து நிலையினை இனங்காணுவது ஆய்வின் பிரதான நோக்கமhக உள்ளன.

## கலந்துரையாடல்கள் மற்றும் கண்டறிதல்கள்

நேர்காணல்களில் பதிலளித்தவர்கள் பன்முகக் குடும்பங்களில் உள்ள கணவன்-மனைவி உறவு நிலைகள் தொடர்பிலும் அவர்களின் அன்றாட வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களில் பலதாரமண வாழ்க்கை முறையை எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பதைத் தங்களின் அனுபவ ரீதியான கருத்துக்கள் மூலம் விவரிக்கிறார்கள். இவர்களில் ஒருவர் சட்டத்துறையினையும் அநேகமானோர் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ துறைகளையும் ஒப்பீட்டளவில் பெரும்பான்மையானோர் கற்பித்தல் துறையினைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். பெரும்பான்மையான பெண்கள் தப்லிக் ஜமாஅத் அமைப்பினைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. பலதாரமணம் பற்றி கிண்ணியா வாழ் முஸ்லிம் பெண் செயற்பாட்டாளர்களுக்கு மத்தியல் பிரதானமாக மூன்று வகையான கருத்து நிலைகள் காணப்படுவது தரவுப் பகுப்பாய்வின் பெறுபேறுகளாக அமைகின்றன. அதனடிப்படையில் பலதாரமணம் குறித்த பெண் செயற்பாட்டாளர்களின் முன்னோக்குகளைப் பின்வருமாறு நோக்கலாம்.

### பலதாரமணத்தினைப் பெண்களுக்கு நன்மையாகக் கருதி பிறருக்குப் பரிந்துரை செய்தல்

பலதாரமணமானது கிண்ணியா சமூகத்தில் பொதுவான திருமணமாக இல்லாவிட்டாலும் அது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதனடிப்படையில் பலதாரமணத்தினைப் பெண்களுக்குப் பரிந்துரை செய்தல் இன்றைய காலத்தின் தேவையென ஒரு சாரார் குறிப்பிடுகின்றனர். பெண்களின் தொகை அதிகரித்து வரும் இன்றைய காலத்தில் பலதாரமணத்தின் தேவையை முஸ்லிம் சமூகம் உணர வேண்டும் என இவர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் விதவைப் பெண்கள், ஏழைக் குமர்(ரி)கள், விவாகரத்துப் பெற்ற பெண்கள் போன்றோருக்கு இத்திருமணம் மூலம் வாழ்வில் சௌகரியம் அடையக் கூடிய நிலையுள்ளதனால் பலதாரமணத்தினை நன்மையாகக் கருதி இதனைப் பெண்களுக்குப் பரிந்துரை செய்யலாம் எனும் கருத்து நிலை இவர்களிடம் காணப்படுகிறது.

மேலும் பலதாரமணத்தின் பொருத்தம் குறித்துப் பல கருத்துக்கள் பெண்கள் மத்தியில் நிலவினாலும் ஆண்கள் பொருளாதார வளங்களைப் கொண்டிருக்கும் பட்சத்தில் இத்திருமண முறையினை அனுமதிக்கலாம் (Borgerhoff-Mulder, 1992)[27] எனும் கருத்தில் இவர்கள் உடன்படுகிறார்கள். மேலும் பின்தங்கிய கிராமங்களிலுள்ள ஒரு சில பலதாரமணியாளர்களும் தமது வாழ்வில் திருப்தியை வெளிப்படுத்தக்கூடும் (Gwanfogbe et al, 1997)[28] எனவும் குறிப்பிடுகிறார்கள். அதுமட்டுமன்றி இஸ்லாமிய நல் நோக்கத்தின் அடிப்படையில் நல்ல பொருளாதார பலத்தினையும் ஒழுக்கத்தையும் ஒருங்கே பெற்று தனது முதல் மனைவியியின்

அங்கீகாரத்துடன் (Nate Olsen 2009)[5] ஒருவர் பலதாரமணம் செய்து கொள்ள விரும்பினால் தாராளமாக செய்து கொள்ளலாம் எனும் கருத்து நிலையும் ஒரு சில பெண்களிடம் காணப்படுகின்றது. இஸ்லாத்தில் கைவிடப்பட்ட பெண்களுக்கும், விதவைப் பெண்களுக்கும் மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தினை உணர்ந்தவர்களாகவே கிண்ணியாப் பிரதேச பெண்கள் இருக்கின்றனர் என்பதனை அவர்களின் கருத்துக்களில் இருந்து விளங்கிக் கொள்ள முடிகின்றது.

**பலதாரமணத்தினை சில அவசிய சூழ்நிலைகளின் கீழ் அனுமதிப்பது சிறந்தது**

பலதாரமணம் என்பது இஸ்லாத்தில் சட்ட பூர்வமாக அனுமதிக்கப்படுகின்றது எனும் கருத்தில் அதிகமானோர் உடன்பட்டாலும் மறுபுறம் இதனைப் கட்டாய சூழ்நிலைகளின் பின்னணியிலேயே அனுமதிப்பது சிறந்தது என்ற கருத்து நிலையிலும் மற்றுமொரு சாரார் உள்ளனர். காரணம் நடைமுறையில் பலதாரமணம் மனைவிகளுக்கும் பிள்ளைகளுக்கும் இடையே சமத்துவமின்மை மற்றும் அலைக்கழிவான வாழ்க்கை நிலைக்கு இட்டுச் செல்கின்ற காரணியாக அமைவதாக பெரும்பாலானோர் குறிப்பிடும் அதே நேரம் பலதார திருமணங்களில் சமத்துவத்தினைப் பேணுவதென்பது இன்றைய ஆண்களுக்கும் பெண்களுக்கும் மத்தியில் கடினமானது என்றும் அபிப்பிராயப்படுகின்றனர்.

விதவை மற்றும் முதுகன்னிகளுக்கு வாழ்வளித்தல், குழந்தைகள் இல்லாத வீடுகளில் பிள்ளை பெறுவதற்கான தேவை கருதி மறுமணம் செய்தல், ஒரு மனைவியின் தீவிர நோய் நிலை என்பன பலதாரமணத்துக்குரிய முக்கியமான காரணிகளாக இவர்களால் கருதப்படுகின்றன. எனவே பலதாரமணத்தினைப் பிறருக்குப் பரிந்துரை செய்யாவிட்டாலும் அதனைக் குறித்த சில சூழ்நிலைகளின் கீழ் அனுமதிக்கலாம் என்பது இவர்களின் கருத்து நிலையாக இருக்கிறது. பலதாரமணமானது குறிப்பாக மனைவிகளிடையே மோதலை ஏற்படுத்தினாலும் சில சந்தர்ப்பங்களில் திருமணமாகாத, கணவனையிழந்த வயதான பெண்ணுக்கு வாய்ப்பளிப்பதாக இருப்பதால் (Alam, 2010)[29] அவ்வாறான நிலையில் பலதார மணம் அந்த குழுவிற்கு உதவுவதற்கான வழியாக அமையும் என்ற கருத்துநிலையினை இவர்கள் கொண்டிருக்கின்றனர். அதுமட்டுமின்றி சக மனைவிகளுக்கு இடையிலும், கணவன் மனைவிக்கு இடையிலும் ஒற்றுமையான மனநிலை, நீதி மற்றும் சமமாக நடத்துதல் என்பவற்றுக்கு உத்தரவாதம் இருக்கும்போது பலதாரமணம் செய்வது சிறந்தென அவர்கள் குறிப்பிடுவதுடன் ஓர் ஆண் இரண்டாவது மனைவியை எடுக்கும் உரிமையை நியாயப்படுத்துவது அவரது இஸ்லாமிய நம்பிக்கையைக் குறிக்கிறது எனும் கருத்து நிலையினையும் கொண்டுள்ளனர்.

**தற்காலத்தில் பலதாரணமானது முஸ்லிம் குடும்பங்களுக்குப் பாதிப்பாக அமைகிறது.**

பலதாரமணத்தினைப் பொருத்தமற்றதெனக் கருதும் ஒரு சாரார் இஸ்லாமிய பலதாரமண சட்டங்களுடன் உடன்படும் அதே வேளை இன்றைய சூழலில் அதனை அனுமதிப்பது பொருத்தமற்றதாகக் கருதுகின்றனர். இஸ்லாம் எக்காலத்துக்கும் பொருத்தமான சட்டங்களையே மனிதனுக்கு வழங்கியிருக்க பலதாரமணமானது எவ்வாறு இன்றைய காலத்துக்குப் பொருத்தமற்றதாய் அமையும் எனும் வினா இங்கு எழுகிறது. அதனடிப்படையில்

பலதாரமணத்தினை எதிர்க்கும் பெண்கள் குழு தமது வாதத்துக்கு முன்வைக்கும் காரணங்களைப் பின்வருமாறு நோக்குவோம்.

**மார்க்க போதனைகளைப் பின்பற்றாமை**

இன்று முஸ்லிம் மக்களிடையே மார்க்க உணர்வும் குடும்ப வாழ்வு தொடர்பான பேணுதலும் குறைவாக உள்ளதனால் ஆண்கள் எவரும் பலதாரமணம் மூலம் பெண்களை நியாயமாக நடத்தமாட்டார்கள் என்பதனை ஒரு காரணியாக முன்வைக்கின்றனர். பலதாரமண குடும்பத்தில் வாழக் கூடிய பக்குவம், ஒற்றுமை, பொறுமை, தியாக உணர்வு என்பன கிண்ணியாவிலுள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையில் இருக்குமா எனும் கேள்வியுடன் இவர்களின் வாதம் தொடங்குகிறது. முஸ்லிம்கள் தமது குடும்ப வாழ்வு தொடர்பான விடயங்களில் அலட்சியமாக நடந்து கொள்தல், சிறிய விடயங்களுக்காக விவாகரத்துக் கோரி நிற்றல், பிள்ளைகளும் மனைவிமார்களும் ஒழுங்காக பராமரிக்கப்படாமல் கைவிடப்படல் போன்றவற்றையும் சுட்டிக் காட்டுகின்றனர். இந்நிலையில் ஒரு பெண்ணுக்கு வாழ்வு கொடுத்து அவளைப் பாதுகாத்துப் பராமரிக்கும் நோக்கம் இல்லாமல் போகிறது ஆகையால் எதற்கு இந்தப் பலதாரமணம் என்று வாதிக்கின்றனர். இதனடிப்படையில் ஒருவரிடம் சரியான மார்க்கப் பற்று இல்லாத போது ஒற்றைத்தார குடும்பங்களை விடவும் பலதார குடும்பங்களில் ஏற்படும் சிக்கல்கள் அதிகமானவையாக இருக்கும் என்றும் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஒருவரின் மார்க்கப் பற்றினை அவரின் வெளிப்படையான நடத்தைகளை மாத்திரம் கொண்டு சரியாக அளவிடுவதென்பது கடினமாகும். இருந்தாலும் ஒருவர் சமூகத்தில் நடந்துகொள்கின்ற நிலைகளைப் பொறுத்தே அவருக்கான இடமும் மரியாதையும் கணிக்கப்படுகிறது. ஒரு சிலரின் பிழையான நடத்தைகளை மாத்திரம் கொண்டு சமூகத்திலுள்ள அனைவரையும் பிழை காண முடியாது. எனவே பலதாரமணத்தினை அங்கீகரிக்க முடியாது என்பதற்கு இன்றைய முஸ்லிம்களுக்கு மார்க்கப் பற்றும் குடும்ப வாழ்வு தொடர்பான விழிப்புணர்வும் குறைவு என்பதனை அதிகமான பெண்கள் குறிப்பிடுகின்றனர். பலதாரமண வாழ்வில் மனிதன் நியாயமாக இருக்க முடியாவிட்டால் குடும்பத்தில் உள்ள மனைவிமார்கள் மற்றும் பிள்ளைகள் திருப்தி அடைய மாட்டார்கள். எனவே குடும்ப வாழ்வு தொடர்பில் விழிப்புணர்வு அற்றவர்கள் இரண்டு பெண்களைத் திருமணம் செய்து தமது நிம்மதியினை அழித்துக் கொள்கின்றனர் என்பதும் இவர்களின் கருத்தாக இருக்கின்றது. ஒரு பெண் தனது வாழ்வில் முழுமையான மன ஆறுதலையும் திருப்தியையும் உணர்வதென்றால் அவள் இறைவனின் போதனைகளை விளங்கி ஏற்று அதன்படி தன் செயற்பாடுகளை அமைத்துக் கொண்டு செயற்படும் அதே நேரம் அவளது கணவனும் இஸ்லாமிய போதனைகளை ஏற்று அதன்படி செயற்பட்டால் மாத்திரம் தான் வாழ்வில் திருப்தியை காண முடியும் என்பதும் ஒரு சில பெண் செயற்பாட்டாளர்களின் கருத்து நிலையாக இருக்கின்றது. ஏனெனில் ஒரு திருமண வாழ்வு இனிமையாக இருக்க வேண்டும் எனில் கணவன் மனைவி இருவருக்கும் இடையில் உள்ள புரிதல் அடிப்படையாக இருக்கின்றது.

**பொருளாதார பலமின்மை**

பலதாரமணத்தினைப் பொருத்தமற்றதாகக் கருதுவதற்கு மற்றுமொரு காரணியாக பொருளாதார பலமின்மையைச் சுட்டிக் காட்டுகின்றனர். ஓர் ஆண் திருமணம் செய்வதற்கு

வெறுமனே ஆசைகள் மாத்திரம் இருந்தால் போதாது. மாறாக பொருளாதார வளங்களும் இருக்க வேண்டும் என்றும் அத்தகைய நிதிசார் வளங்கள் குறைவாக உள்ளவர்கள் திருமணம் செய்வதால் பெண்களே அதிகம் துன்பத்துக்கு உள்ளாவர் (Nurmila, 2016)[30] என்று குறிப்பிடுகின்றனர். எனவே பலதாரமண பங்கேற்பில் பொருளாதார தேவைப்பாடுகள் முக்கிய பங்கினை வகிக்கின்றதென்பது இவர்களின் கருத்து நிலையாக இருக்கின்றது. மேலும் நபிமொழியின் (புஹாரி, 5351) போதனைக்கு அமைவாக ஆண்கள் தங்கள் குடும்பத்தைப் பராமரிப்பவர்களாக உள்ளதால் ஒரு கணவர் எல்லா மனைவிகளையும் பிள்ளைகளையும் சமமாக நடத்தும் பலத்தினையும் மனத்தினையும் கொண்டிருப்பது முக்கியமாகும். மேலும் குறிப்பிட்ட சில பெண் செயற்பாட்டாளர்களின் கருத்துக்களின்படி பலதார குடும்பங்களில் உள்ள பெண்களின் வாழ்க்கைத் திருப்தி என்பது கணவன் அவளை நடத்தும் விதத்தில் தங்கியுள்ளது என்றும் தம்மால் அதனை அளவீடு செய்வதென்பது சற்று கடினமானது என்ற கருத்து நிலையிலும் உள்ளனர்.

பொதுவாக முஸ்லிம் சமூகங்களில் ஒரு திருமணத்தின் போது பெண்களுக்குக் கணவனால் வழங்கப்படும் மஹறின் பெறுமதி குறைவாக இருப்பதும் கைக்கூலி கொடுத்து திருமணம் நடைபெறுவதும் நன்கு அறிந்த விடயமாக இருக்கின்றது (சூளனி, 2009)[22]. இந்நிலையே கிண்ணியாவிலும் உள்ளதாக பெண்கள் குறிப்பிடுகின்றனர். இன்னும் கிண்ணியாவிலுள்ள பிரதேச வழக்காறுகளின் படி பெரும்பாலான ஆண்கள் தமது திருமணத்துக்கு பின்னர் பெண்ணின் வீட்டிலோ அல்லது பெண் வீட்டாரினால் அமைத்துக் கொடுக்கப்படும் வீட்டிலோ வசிக்கும் நிலை காணப்படுகின்றது. எனவே மனைவிமார்களுக்குரிய உறையுள் வசதிகளை மேற்கொள்தல் தொடர்பான செலவுகள் இங்கு ஒரு ஆணுக்கு குறைவாகும். அதுமட்டுமன்றி சில ஆண்கள் பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்பி அவள் வருமானத்தை எதிர்ப்பார்த்தவர்களாக இருக்கும் நிலையில் கிண்ணியா வாழ் ஆண்களுக்குப் பலதாரமணம் அவசியமற்றது என்றும் இன்னும் இங்குள்ள அநேகமான முஸ்லிம் குடும்பங்கள் குறைந்த வருமானத்தைப் பெறக்கூடிய குடும்பங்களாக இருப்பதாலும் ஆண்களுக்குத் தொழில் பிரச்சினைகள் காணப்படுவதாலும் ஓரளவு பொருளாதார வளம் கொண்ட ஆண்கள் இன்னுமொரு திருமணம் செய்வதென்பது அரிதானது என்றும் குறிப்பிடுகின்றனர். மறுபுறம் ஓர் ஆண் பொருளாதார பலம் கொண்டு இருந்தாலும் பெண்களிடம் நியாயமாக நடக்க முடியாத நிலை ஏற்படுவதால் இரு குடும்பங்களிலும் பொருளாதார பிரச்சனைகளைச் சமாளிப்பது என்பது ஓர் ஆணுக்கு மிகப் பெரிய சவாலாக அமையும் என்பதும் இவர்களின் கருத்து நிலையாக இருக்கின்றது.

### தற்காலத்தில் பலதாரமணமானது பெண்களுக்குத் தீங்கு விளைவிக்கும்

பொதுவாக முதல் மனைவிக்குத் தெரியாமலே மற்றைய திருமணங்கள் இரகசியமாக நடைபெறுவதாகவும் பலதாரமணத்திற்கான திருமணக் கூட்டாளர்களின் சில நடவடிக்கைகள் சட்ட ஒழுங்குகளை மீறி நடப்பதாகவும் அறிய முடிகிறது. எனவே பலதாரமணம் ஒன்றுக்கான ஆரம்ப அணுகுமுறையே முதல் மனைவிக்கு எதிராக அமைகிறது என பெரும்பாலான பெண் செயற்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் தனது வாழ்க்கையை இன்னொரு பெண்ணுக்குப் பகிர்ந்தளித்தல் என்பது ஒரு பெண்ணால் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாக இருக்கும் நிலையில் பலதாரமணமானது பெண்களின் மன ஆரோக்கியத்துடன் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும் (Nihaya, 2013)[6] என்ற கருத்து நிலையில் இவர்கள் உள்ளனர். சில வேளைகளில் ஒரு மனைவி சக மனையியுடன் விட்டுக்

கொடுத்து நடந்தாலும் மற்றைய பெண்ணும் ஒற்றுமையாக இருப்பாள் என்பது உறுதியாகக் கூறமுடியாது. கணவன் ஒருத்தியுடன் காட்டும் பாரபட்சம் பிற மனைவியைப் பல விதத்திலும் பாதிக்கலாம். இது குடும்பம் எனும் எல்லையைத் தாண்டி சமூகத்திலும் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும். பொதுவாக பலதார குடும்பங்களிலுள்ள பெண்கள் இணை மனைவிகளுடன் பொறாமைப்படுவதால் (Borgerhoff-Mulder, 1992)[27]. அவர்கள் உள ரீதியில் காயப்படும் நிலையேற்படுகிறது (Al-Krenawi et all, 2001)[31]. இந்நிலை தொடருமெனின் காலப்போக்கில் அவர்கள் மனநோயாளிகளாகவும் மாறலாம் (Chaleby, 1987)[32]. அதுமட்டுமன்றி பலதாரமண வாழ்வில் பெண்கள் தமது சுயமரியாதையை சிலபோது இழக்க நேரிடுவதால் (Al-Krenawi, 2001)[31] தமது குடும்ப உறுப்பினர்களிடம் இருந்தும் சில சமயம் கணவனிடம் இருந்தும் புறக்கணிப்பை எதிர்கொள்கின்றனர். போன்ற பல காரணங்களை இவர்கள் முன்னிலைப்படுத்துகின்றனர். மேலும் பலதார குடும்பங்களில் இரண்டாவது மற்றும் மூன்றாவது மனைவிகளைக் காட்டிலும் முதல் மனைவிகள் அதிகமான குடும்பப் பிரச்சினைகள், குறைவான வாழ்க்கைத் திருப்தி, அதிக கவலை, மற்றும் அதிகமான மனநோய்களுக்கு உள்ளாவதாக கர்னாவி (Al-Krenawi et al, 2006)[33] தனது ஆய்வில் சுட்டிக்காட்டுகிறார். எனவே இவரின் கருத்துடன் கிண்ணியா வாழ் பெண் செயற்பாட்டாளர்களின் கருத்து நிலையும் ஒத்துப்போவதாகத் தெரிகின்றது. மேலும் பலதாரமணமானது சில சமயம் குடும்பங்களில் பாதுகாப்புச் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் என்பது அநேகமான பெண்களின் கருத்து நிலையாக இருக்கின்றது. ஏனெனில் ஓர் ஆண் தொழிலுக்குச் செல்ல வேண்டிய நிலையில் இருப்பதனால் வீட்டிற்கு வெளியிலேயே அதிக நேரத்தினைச் செலவிட வேண்டி ஏற்படும். இன்னும் சில சமயங்களில் தொழில் விடயங்கள் தொடர்பாக ஆண்கள் வெளியூர்களுக்கு பயணம் செல்ல வேண்டிய சூழ்நிலைகளும் தோன்றலாம். இந்நிலையில் அது இரு மனைவிமார்களின் வீட்டில் உள்ளோருக்குத் தீங்கினை ஏற்படுத்தும் சூழலை உருவாக்கும் எனக் குறிப்பிடுகின்றனர்.

**மக்களின் வாழ்க்கை முறை**

பலதாரமணம் தற்காலத்தில் பொருத்தமற்றது எனக் கருதுவதற்கு மற்றுமொரு காரணியாக மக்களின் வாழ்க்கை முறையினை முன்னிறுத்துகிறார்கள். கிண்ணியாவிலுள்ள பெரும்பாலான முஸ்லிம் குடும்பங்கள் ஒற்றைத்தார குடும்பங்களாகவே உள்ளன. இந்நிலையில் ஒரு பெண்ணினது வாழ்வு அவளது கணவனையும் பிள்ளைகளையும் மட்டுமே கொண்டதாக இருக்கிறது. காரணம் பெரும்பாலான பெண்களுக்கு வீட்டிற்கு வெளியில் வேலைகள் இருப்பதில்லை. அவர்கள் தங்கள் கணவருக்காகவும் குடும்பத்துக்காகவும் தமது நேரத்தினைச் செலவிடுகிறார்கள் (Hoodfar, 1997)[34]. இவ்வாறான சூழலில் தன் கணவர் இன்னொரு பெண்ணை திருமணம் செய்துள்ளார் எனும் விடயமானது மூத்த மனைவிக்கு வாழ்வில் அதிர்ச்சியையும் அதிருப்தியையும் ஏற்படுத்தும் (Chaleby, 1987)[32] என்பதில் சந்தேகமில்லை என்று குறிப்பிடுகின்றனர்.

பொதுவாக ஓர் ஆண் தனது முதல் மனைவி உயிருடன் இருக்கும் போது இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்வதை கிண்ணியா மக்கள் வித்தியாசமான கண்ணோட்டத்தில் நோக்குபவர்களாக உள்ளனர். காரணம் பலதாரமண நடைமுறையானது கிண்ணியா கலாச்சாரத்தில் மிகக் குறைந்தளவில் நடைபெறுவதும் அது குடும்பத்துக்கு தோதான திருமணமாக மக்களினால் கருதப்படாமையும் ஆகும். எனவே இத்திருமண நடைமுறைக்கு கிண்ணியா மக்களிடையே வரவேற்பு குறைவாகவும் அதே நேரம் ஒப்பீட்டளவில் ஒற்றைத்தார

திருமணத்திற்கே அதிக வரவேற்பும் கௌரவமும் வழங்கப்படுப்படுவதாக பெரும்பாலான பெண் செயற்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர். முதல் திருமணத்தைப் போன்று இரண்டாவது திருமணம், பெற்றோர் மற்றும் உறவினர்களின் பங்கேற்புடனும் ஒத்துழைப்புடனும் நடைபெறுவதில்லை. மேலும் நடைமுறையில் பல முஸ்லிம் ஆண்கள் தனது முதல் மனைவியின் சம்மதம் இன்றியே மறுமணத்திற்குள் நுழைகின்றனர். இதனால் பலதார குடும்பங்களில் உள்ள இளைய மனைவிக்குச் சமூகத்தினால் வழங்கப்படும் மதிப்பு மற்றும் கௌரவம் என்பன மூத்த மனைவிகளை விடக் குறைவாகும் எனக் குறிப்பிடுவதோடு படிக்காத மற்றும் குறைந்த பொருளாதார நிலைகளுடைய பெண்களே இத்திருமணத்தை அனுமதிப்பார்கள் (Mabaso et al, 2018)[35] எனும் கருத்து நிலையிலும் உள்ளார்கள்.

**பாரம்பரிய நம்பிக்கைகள்**

“ஒருவன் ஒருத்திக்குத் தான்”, “சாவக்கொடுத்தாலும் வாழக்கொடுக்க மாட்டாள்” “உண்ணக் கொடுத்தாலும் பொன்னக்கொடுத்தாலும் தன் புரு~னைக் கொடுக்க மாட்டாள்” போன்ற மரபு ரீதியான ஐதீகங்கள் பலதாரமணம் தொடர்பில் எதிர்மறையான கருத்துக்கள் பெண்கள் மத்தியில் தோன்றுவதற்கு ஒரு முக்கிய காரணியாக அமைந்து விடுகிறது. மேலும் இத்தகைய நம்பிக்கைகள் தனது கணவன் இன்னொரு திருமணம் செய்து கொள்வதை விட்டும் தடுக்கக் கூடியதாக இருக்கின்றது. எனவே இவ்வாறான நம்பிக்கைகளின் கீழ் வாழும் பெண்கள் மத்தியில் பலதாரமண நடைமுறைகள் தேவையற்ற சிக்கலினை ஏற்படுத்தும் எனும் கருத்து நிலை பெரும்பாலான கிண்ணியா வாழ் பெண்களுக்கு மத்தியில் மிகைத்துக் காணப்படுவதால் பலதாரமணத்தினைப் பொறுத்தமற்றதாகக் காணச்செய்துவிடுகின்றது.

ஒரு பெண் தனது கணவனின் பிற மனைவியைக் குத்திக் காட்டிப் பேசுவதும், அவளது குடும்பத்தை இழிவுபடுத்துவதும் அவளது பிள்ளைகளுக்குச் சாபம் விடுவதையும் எமது சமூகத்தில் அவதானிக்கக் கூடியதாகவே உள்ளது. பலதாரமண நடைமுறையில் நன்மைகளோ அல்லது தீமைகளோ இருக்கலாம். எவ்வாறெனினும் பலதாரமண நிலைமை பெண்களுக்கு நல்லதல்ல ஏனென்றால் அது அவர்களை மற்ற மனைவிகளுடன் போட்டியிட வைக்கிறது. இரு குடும்பத்துக்கும் இடையில் அதிகளவு மோதல்களை ஏற்படுத்துகிறது. எனும் கருத்து நிலை பெரும்பாலான பெண்களுக்கு மத்தியில் மேலோங்கிக் காணப்படுகின்றது. இஸ்லாம் எக்காலத்துக்கும் பொருந்தக் கூடிய ஒரு மார்க்கம் என்ற படியால் சர்வ வல்லமை கொண்ட இறைவன் இத்திருமணமுறையை அனுமதித்து ஒரு சட்டத்தை ஏற்படுத்தி இருக்கின்றான் எனில் நன்மைகளையே அதிகம் வைத்திருப்பான். அதே போலவே பலதாரமணம் மூலம் பெண்களின் நிலையினை மகிமைப்படுத்தி அவர்களின் துயரங்களை அழிப்பதற்கும் அச்சுறுத்தல் அற்ற வாழ்வினை வாழ வழி செய்வதற்கும் இதனைச் சில நிபந்தனைகளின் கீழ் அனுமதித்து இருக்கிறான். எனவே பலதாரமணத்துக்குரிய காரணங்கள் குறித்த நியாயமான பின்னணியிலிருந்து விளங்கப்பட வேண்டும். ஒரு விடயத்தின் மூலம் அதிகம் தீமைகளே ஏற்படக் கூடிய சூழல் உருவாகும் எனின் அதனை விட்டு விலகி இருப்பது அல்லது அத்தகைய விடயத்தினை இறை வழிகாட்டல்களின் கீழ் அமைத்துக் கொள்வது சிறந்தது.

நம் நாட்டில் பெரும்பாலான திருமணங்கள் ஒற்றைத்திருமணங்களாகவே உள்ளன. இருப்பினும் பலதாரமணத்தினைப் பின்பற்றுபவர்களும் உள்ளனர். பலதாரமண வாழ்வில் ஒருவர் அவரைச் சுற்றியுள்ளவர்களின் முழுமையான மன ஆரோக்கியத்துக்கு இடையூறு விளைவிக்காமல் பராமரிக்க முடிந்தால் அது குடும்பத்துக்கு ஆரோக்கியமாக அமையும். அதே

நேரம் ஒருவர் தனது மற்றைய துணைவிக்குத் தெரியாமல் பலதாரமண உறவில் ஈடுபடுகிறார்கள் என்றால் எப்போதுமே அது பிரச்சினைகளையும் சிக்கல்களையும் ஏற்படுத்துவதாகவே அமையும். எவ்வாறெனினும் பலதாரமண வாழ்வில் பெண்களினதும், பிள்ளைகளினதும் நலன்கள் உறுதி செய்யப்படுதல் முக்கியமாகும்.

**முடிவுரை**

பலதாரமணத்தின் தேவை மற்றும் தற்காலத்தில் அதன் பொருத்தம் தொடர்பில் பெண் செயற்பாட்டாளர்களினால் குறிப்பிடப்பட்ட கருத்து நிலைகளில் ஒருமுகத்தன்மையின்மை நிலவுகின்றதை அவதானிக்கலாம். பலதாரமணத்தினைச் சில சூழ்நிலைகளின் அடிப்படையில் அனுமதிக்கலாம் எனும் கருத்து நிலை அநேகமான பெண்கள் மத்தியில் காணப்பட்டாலும் ஒப்பீட்டளவில் இத்திருமண நடைமுறைக்கு எதிர்மறையான கருத்து நிலைகளே மேலோங்கியும் மிகைத்தும் காணப்படுகின்றன. இந்நிலைக்கு அவர்கள் முன்வைக்கும் காரணங்கள் பெண்களின் மன ஆரோக்கியம், கிண்ணியாவின் பிரத்தியோக சூழல், கலாசார நம்பிக்கைகள், பொருளாதார பற்றாக்குறை, மக்களின் வாழ்க்கை முறை, இஸ்லாமிய போதனைகள் தொடர்பில் விழிப்புணர்வின்மை போன்றவற்றை மையப்படுத்தியதாகத் தெரிகின்றது. எனினும் இஸ்லாமிய பலதாரமண சட்டங்களுடன் (அல்குர்ஆன் 4:3) தாம் உடன்படுவதாகவும் பெரும்பாலான பெண்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாய்வினையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களையும் கொண்டு எதிர்காலத்தில் புதிய ஆய்வுகளையும், வெளியீடுகளையும் வெளியிடலாம். பலதாரமணத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் பிற அளவிடப்படாத காரணிகளும் இருக்கலாம். அவ்வாறான விடயங்களைக் கொண்டு ஆய்வினை மேலும் விரிவுபடுத்தலாம். இவ்வாய்வானது பலதாரமணம் தொடர்பில் பெண்களின் கருத்துக்களை ஆராய்வதோடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் பல தலைப்புகளில் ஆய்வுகளை மேற்கொள்ளலாம். கிண்ணியா பிரதேசத்தின் சமூக-பொருளாதார மற்றும் மக்கள்தொகை உட்பட நவீனமயமாக்கலின் அதிகரித்த அம்சங்களில் ஏற்படும் மாற்றங்கள் பெண்களிடையே ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பான சமகால ஆய்வுகள் தேவை. சமூக ஆர்வலருக்கும், பெண்கள் உரிமைசார் பொது அமைப்புக்களுக்கும் இவ்வாய்வின் கண்டறிதல்கள் துணையாக அமையவல்லது பெண்களின் நல்வாழ்வுக்கான பலதாரமண குடும்ப கட்டமைப்புகளின் முக்கியத்துவம் குறித்த பொது விழிப்புணர்வை அதிகரிக்க பொதுக் கொள்கை மற்றும் சமூக சேவைப் பணியாளர்களை அழைத்தல் போன்ற சில பரிந்துரைகளையும் இவ்வாய்வு முன்மொழிகிறது.

**மேற்கோள் நூல்கள்:**


1. Syeda, Azad. (2018). Laws of Muslim marriage from concept of the holy Quran. *International journal of engineering and applied science.*
2. Philips, A.A.B. & Jones, M. (2005). Polygamy in Islam. Riyadh: International Islamic Publishing House.
3. Zaidi, T. (2016). Polygamy: In the Perspective of Islam. *Social Sciences International Research Journal. 2 (*1) P. 201-205
4. White, D.R. (1988). Rethinking polygamy: Co-wives, codes, and cultural systems. *Current Anthropology*.29 (4), 529-572.

5. Nate Olsen. (2009). marriage and divorce in Islamic and Mormon polygamy a legal comparison. *Intermountain West Journal of Religious Studies* 1 (1) p.90
6. Nihaya, D. (2013, May 30). Polygamy And Poor Mental Health Among Arab Bedouin Woman: Do Socioeconomic Position And Social Support Matter?. *Journal of Ethnicity and Health. 19*(4) P.385 - 405
7. Thobajane, T. D. & Flora, T. (2014, Dec 1). An Exploration Of Polygamous Marriages: A Worldview. *Mediterranean Journal of Social Sciences*. *5*(2039-2117) P. 10-58.
8. Johnson, H. (2005). There are Worse Things Than Being Alone: Polygamy in Islam, Past, Present, an Future. William & Mary Journal of Women and the Law. 11 (3) P. 563-596.
9. Hatem, M., Haeri, Hessini, Weiss. (1995). Women and social reform. In J. L. Esposito (Ed.), *The Oxford Encyclopedia of the Islamic World*. Oxford: Oxford University Press.
10. Gpp. (2008). Challenging polygamy in a Muslim community of south east Asia. *Journal of Adventist Mission Studies* 4 (2) P. 36-43.
11. Amez, Monika. (2010). Empowering women through Islam: fatayat NU between tradition and challenge. *Journal of Islamic studies.* 21 (1) 66.doi:10.1093/jis/etp025 (41)
12. Moghissi, Haideh. (2002). *Feminism and Islamic Fundamentalism*. London: Zed books ltd.
13. Ahamed, Wasi. (2014). Criminalization of polygamy in Canada: historical, legal and sociological analysis. *Osgoode legal studies research paper series 78* vol.10.17
14. Zainal, Fathima. (2019 oct 16) Okay with polygamy but not in their own marriage. the star online. Retrieved From https://www.thestar.com.my/new
15. Berkowitz. (2007). Gay men negotiating procreative father and family identities. *Journal of marriage and family* 69. 2
16. Rohman. (2013). Reinterpret Polygamy in Islam:A Case Study in Indonesia.*Int J Hum & Soc Sci Inv,2*(10),68-74.
17. Arif, Y. & Fatma, Y. (2018). Syrian Woman's View of Polygamy. *The Eurasia Proceedings of Educational & Social Sciences (EPESS)* 10 P. 223-233
18. Nurmila, Nina. (2009). Women Islam and everyday life renegotiating polygamy in Indonesia. Londn: Routledge
19. Shepard L. D. (2013). The impact of polygamy on women's mental health: a systematic review. *Epidemiology and psychiatric sciences*, *22*(1), 47–62. https://doi.org/10.1017/S2045796012000121
20. Al Krenawi, Graham. (2001). The cultural mediator bridging the gap between a non-western community and professional social work practice. British journal of social work 31 5 665-685
21. Özer A, Orhan FÖ, Ekerbiçer HÇ. (2013). Sociodemographic variables and depression in Turkish women from polygamous versus monogamous families. Health Care Women Int. 34(11):1024-34. doi: 10.1080/07399332.2012.692414.
22. Choolani. (2009). Ilangail Muslim kudumpa sattam (Muslim family law in Sri Lanka). Colombo: Muslim pegal Arachchi seyal Munnani.
23. Sreen, A. (2016). Muslim woman second class rights holders in sri lanka. Retrived from. https://srilankabrief.org/2016/12/muslim-women-second-class-rights-holders-in-sri-lankas-
24. Hasnah. (2015). Islamiya nokkil palnilai samaththuvam mattum samuha neethi: Muslim vivahe vivaharaththu sattamum Islamiya sattamum (Gender equality and equity: Muslim marriage and divorce act and Islamic law). Dehiwala: Ilangai apivirithikana oodahaviyalalar mantam.
25. Marsoof, Saleem. (2008). Ilangaiyin khadhi neethimantamum Muslim pengal meethana athan thakkamum (Quazi cort system in Sri Lanka and its impact on Muslim women). Colombo: Muslim pegal Arachchi seyal Munnani.

26. Census of Population. (2018). Kinniya Divisional Secretariat Report. Kinniya
27. Borgerhoff-Mulder, M. (1992). Women's strategies in polygamous marriage: Kipsigis, Dotoga, and East African cases. *Human Nature*. 3 (1), 45-70
28. Gwanfogbe, P.N., Schumm, W.R., Smith, M., & Furrow, J.L. (1997). Polygamy and Marital Life Satisfaction: an Exploratory Study from Rural Cameroon. *Journal of Comparative Family Studies*. 28 (1), 55-71.
29. Alam, Sulthana M. (2010). A general understanding of polygamy among upsi communities: problems and prospects. *Ozean Journal of Social Sciences*. 3. 185-191.
30. Nurmila, Nina. (2016). Polygamous Marriages in Indonesia and Their Impacts on Women's Access to Income and Property. Al-Jami'ah: Journal of Islamic Studies. 54. 427. 10.14421/ajis.2016.542.427-446.
31. Al-Krenawi, Alean. PhD, John Graham PhD & Abuelaish Izzeldin MD (2001) The Psychosocial Impact of Polygamous Marriages on Palestinian Women, *Women & Health*, 34:1, 1-16,
32. Chaleby, K. (1987). Women of polygamous marriages in outpatient psychiatric services in Kuwait. *International Journal of Family Psychiatry*. 8, 25-34.
33. Al-Krenawi, Alean & Graham, John & S, Ben-Shimol-Jakbson. (2006). Attitudes Toward and Reasons for Polygamy Differentiated by Gender and Age Among Bedouin-Arabs of the Negev. International Journal of Mental Health. 35. 46–61. 10.2753/IMH0020-
34. Hoodfar, H. (1997). The impact of male migration on domestic budgeting: Egyptian women striving for an Islamic budgeting pattern. *Journal of Comparative Family Studies*.28 (2), 74-98.
35. Mabaso, M.L.H., Malope, N.F. & Simbayi, L.C. (2018). Socio-demographic and behavioural profile of women in polygamous relationships in South Africa: a retrospective analysis of the 2002 population-based household survey data. *BMC Women's Health* 18, 133.